# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


இயேசு கூறியது: "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார்; மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்" என்று கூறினார்.
(மத் 11: 25-27)


## THE TITULAR ROMAN CATHOLIC BISHOP OF PENANG
## DIOCESE OF PENANG

Catholic Diocesan Centre
290, Jalan Macalister, George Town, 10400 George Town, Pulau Pinang
E-mail: trcb@pgdiocese.org / penangdiocese@gmail.com
Website: www.pgdiocese.org


1 ஜூலை 2020

PKK/BDN/2020/07/049

## பத்திரிகை அறிக்கை

**புக்கிட் மெர்த்தாஜாம்:** புனித அன்னம்மாள் மைனர் பசிலிக்காவின் அதிகாரப்பூர்வ வலைத்தளம், இன்று ஜூலை 1-ஆம் தேதி 2020, அதிகாரப்பூர்வ வலைத்தளமாக தொடங்கப்படும் புனித அன்னம்மாளின் யாத்திரையாளர்கள் மற்றும் பக்தர்கள் இப்போது புனித அன்னம்மாள் திருவிழா அட்டவணை மற்றும் நிகழ்வுகளை எளிதாக அணுகலாம், இந்த ஆண்டில் இதனை முழுமையாக நேரடி ஒளிபரப்பில் காணலாம்.

இந்த வலைத்தளம் இந்த ஆண்டு ஜூலை 24, 2020 - ஆகஸ்ட் 2, 2020 புனித அன்னம்மாள் திருவிழாவின் போது மிக சிறப்பான முறையில் ஒருவருக்கொருவர் இணைந்திருக்க ஒரு வழிமுறையாக இருக்கும், ஏனெனில் கோவிட்-19 தொற்றுநோய் பரவல் காரணமாக இந்த திருவிழாவின் போது உடல் ரீதியாக ஒன்றாக இருப்பது சாத்தியமில்லை.

இந்த ஆண்டு புனித அன்னம்மாள் திருவிழாவின் 10 நாள்களில் படைப்பு, உட்படுத்தல் மற்றும் உறவு வளர்த்தல் போன்ற வழிகளில் மற்றவர்களை நேசிக்கவும் சேவை செய்யவும் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர் முயற்சிகள் பின்வருமாறு:

1. ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் திவ்விய ஆராதனை மற்றும் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

2. நவநாள் மற்றும் திருப்பலிகள் தேசிய மொழி, தமிழ், ஆங்கிலம் மற்றும் மெண்டரின் மொழிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

3. திருத்தலத்தில் காணப்படும் புனித அன்னம்மாளின் அசல் சுரூபத்தை இந்த வளைத்தளத்தின் மூலம் நேரடியாகப் பார்க்கலாம்.

4. திருயாத்திரையாளர்கள் மற்றும் பக்தர்கள் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றவோ, மலர் வளையங்கள் மற்றும் பூக்கள் வழங்கவோ, புனித அன்னம்மாளுக்கு மன்றாட்டு மனுக்கள் எழுத விரும்புவர்கள் இந்த டிஜிட்டல் (இலக்கியல்) வழியின் மூலம் செய்யலாம்.

5. இந்த புனித அன்னம்மாளின் திருவிழாவின் போது ஒரு திருப்பணியாளருடன் பேசவோ, இறைவேண்டல் அல்லது ஆசீர்வாதம் பெற விரும்பினால், ஒவ்வொரு நாளும் திருப்பணியாளர்கள் மற்றும் ஆயர் கூப்பிடும் தூரத்தில் இருப்பர்.

6. தங்கள் பிரச்சனைகளை, சந்தேகங்களை பகிர்ந்து கொள்ளவும், அதனை காது கொடுத்துக் கேட்கவும் ஆலோசனைக் குழுவினரின் சேவை உடனடியாகக் கிடைக்கும்.

7. இந்த இணையதளத்தில் புனித அன்னம்மாளின் பரிந்துரையின் மூலம் அனைத்து மொழிகளிலும் தங்கள் அனுபவங்களையும் சாட்சியங்களையும் பகிர்ந்து கொண்டு உற்சாகமளிக்க திருயாத்திரையாளர்கள் மற்றும் பக்தர்கள் அழைக்கப்படுகிறார்கள், இதன் மூலம் மற்றவர்களும் ஊக்கம் பெறுவார்.

2020-ஆம் ஆண்டின் புனித அன்னம்மாள்; திருவிழாவின் நேரங்கள மற்றும் நிகழ்வுகளின் கூடுதலான பல விபரங்களை, இந்த வலைத்தளத்தில் காணலாம். புனித அன்னம்மாளின் சிறிய பசிலிக்காவின் மேல் விபரங்களை www.minorbasilicastannebm.com என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கண்டறியலாம்.

புனித அன்னம்மாளின் சிறிய பசிலிக்கா உண்மையிலேயே நல்லிணக்கத்தின் திருத்தலம் என்பதை உலகத்திற்குச் சான்றுபகரும், புனித அன்னம்மாளின் எல்லா திருயாத்திரையாளர்களுக்கும் பக்தர்களுக்கும், பல்வேறு மொழி, பண்பாடு, இன பின்னணியுடன் அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு இந்த வாய்ப்பைப் பயனுபடுத்தி நன்றி கூறுகிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

வழங்கியவர்: மேதகு ஆயர் டத்தோ செபஸ்தியன் பிரான்சிஸ், D.D., DSPN

**பினாங்கு மறைமாவட்ட ரோமன் கத்தோலிக்க ஆயர்**



### நல்லிணக்கத்தின் திருத்தலம்

இந்த வட்டாரத்தில் புகழ்பெற்று விளங்கும் புனித அன்னம்மாள் திருத்தலம் கடந்த 5 செப்டம்பர் 2019 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆசீரின் பேரில் மைனர் திருத்தலமாக உயர்நிலை கண்டது.

## நம் தேவைகளுக்காக அல்ல, நம் தேவையே இறைவன்தான்

**வத்திக்கான்**: நம்முடைய பிரச்சனைகளை மட்டுமே இறைவனிடம் ஒப்படைப்பவர்களாக நாம் வாழாமல், நம் வாழ்வையே அவரிடம் ஒப்படைப்பவர்களாக மாற வேண்டும் என்ற அழைப்பை விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வாழ்வை கொடையாக வழங்குவதே வாழ்வின் மிகப்பெரும் விடயமாக இருக்க வேண்டும் எனவும் எடுத்துரைத்த திருத்தந்தை, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கும், குழந்தைகள் பெற்றோர்களுக்கும், மேலும், ஒவ்வொருவரும் தங்கள் அருகில் இருப்போருக்கும் வாழ்வையே கொடையாக வழங்கவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்தார்.

நம் தேவைகளின்போது மட்டும் இறைவனை எண்ணாமல், நம் உண்மையான தேவையே இறைவன்தான் என வாழ்வை நடத்துவோம். பேதுரு எனும் பாறை மீது திருஅவையை கட்டியெழுப்ப இறைவன் விரும்பியது, பேதுரு உறுதியானவர், நம்பிக்கைக்குரியவர் என்பதால் அல்ல, மாறாக, இயேசுவில் தன் வாழ்வை கட்டியெழுப்ப விரும்பிய பேதுரு மீது, தன் திருஅவையை கட்டியெழுப்ப இயேசு விருப்பம் கொண்டதாலேயே என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசு எனும் பெரிய பாறையின் மீது, புனித பேதுரு ஒரு கல்லாக இருந்தார் எனவும் கூறிய திருத்தந்தை, நாமும் நம் வாழ்வில் இயேசுவுக்கு கொடுத்துள்ள இடம் குறித்தும், வாழும் கடவுளின் துணை கொண்டு நம் வாழ்வை கட்டியெழுப்புகிறோமா என்பது குறித்தும் சிந்திப்போம் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக் கொண்டார்.



# துன்புறும் மக்களின் நலனில் அக்கறை காட்டப்பட வேண்டும்

மத்தியக் கிழக்குப் பகுதியின் வருங் காலத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் இணைந்து கடந்த செவ்வாயன்று பிரசல்லஸ் நகரில் கருத்தரங்கு ஒன்றைத் துவங்கியது.

சிரியா மற்றும் மத்தியக் கிழக்குப் பகுதியின் வருங்காலத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கத்தில் ஜூன் 30-ஆம் நாளன்று துவங்கியுள்ள நான்காவது கருத்தரங்கு மக்களின் நலனுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என இறைவனை மன்றாடுவோம் என்று தன் டுவிட்டர் செய்தி வழியே கேட்டுக்கொண்டுள்ளார் திருத் தந்தை பிரான்சிஸ்.

“சிரியா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியமும் ஐக்கிய நாடுகள் நிறுவனமும் இணைந்து இன்று துவங்கியுள்ள நான்காவது கருத்தரங்கு உணவு, மருந்துகள், பள்ளிகள், வேலை போன்றவை தேவைப் படும் மக்களின் நலனுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று செபிப்போம்” என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் இடம் பெற்றிருந்தன.

### கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தைக்கு வாழ்த்து

மேலும், ஜூன் 29-ல், சிறப்பிக்கப்பட்ட புனிதர்கள் பேதுரு பவுல் பெருவிழான்று கான்ஸ்தாந்திநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை முதலாம் பர்த்தலோ மேயோ அவர்களுக்கு தனது சிறப்பான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அன்று, நண்பகலில் வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு இப்பெருவிழாவை மையப்படுத்தி மூவேளை செப உரை வழங்கிய பின்னர் தனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம் இருவரின் சந்திப்பு விரைவில் தொடங்கும் என்ற நம்பிக்கையில் எனது அன்புநிறை சகோதரரான முதுபெரும் தந்தை பர்த்தலோமேயோ அவர்களை ஆன்மீக முறையில் வாழ்த்துகிறேன் என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனிதர்கள் பேதுரு பவுல் பெருவிழாவன்று கான்ஸ்தாந்திநோபிள் முதுபெரும் தந்தையின் பிரதிநிதிகள் குழு ஒன்று உரோம் நகருக்கு வருகைதருவது பாரம்பரியாக இடம்பெறும் ஒரு நிகழ்வு என்பதையும் எடுத்துரைத்தார்.



தற்போதைய கோவிட்-19 கொள்ளைநோய் காரணமாக இந்நிகழ்வு இடம்பெறவில்லை என்றுரைத்த திருத்தந்தை புனிதர்கள் பேதுரு பவுல் பெருவிழாவைச் சிறப்பிக்கும் இந்நாளில் உரோம் மண்ணில் குறிப்பாக நீரோ பேரரசன் காலத்தில் தலைவெட்டப் பட்டும் உயிரோடு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டும் இறந்த ஏராளமான மறைசாட்சிகளை நினைவுகூர விரும்பு கிறேன் என்று கூறினார்.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

## மாற்றுத்திறன் கொண்ட ஒலிம்பிக் வீரருக்கு திருத்தந்தையின் வாழ்த்து

“அன்பு லெஸ்ஸாந்த்ரோ வாழ்வு திடீரென நின்று போனால் அதை எவ்விதம் மீண்டும் துவக்க இயலும் என்பதற்கு உங்கள் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டு" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மாற்றுத்திறன் கொண்ட ஒலிம்பிக் விளையாட்டு வீரர் அலெக்ஸ் சனார்தி அவர் களுக்கு அனுப்பிய ஒரு மடலில் கூறியுள்ளார்.

Formula 1 என்றழைக்கப் படும் அதிவிரைவு கார் பந்தயங்களில் கலந்து கொண்ட அலெக்ஸ் சனார்தி அவர்கள் 2001-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு விபத்தில் தன் கால்கள் இரண்டையும் இழந்தாலும் மீண்டும் அவர் அந்த பந்தயங்களில் தொடர்ந்து பங்கேற்றார்.




# திருவிவிலிய ஞாயிறு செய்தி 2020 இதயப்பூர்வமான திருவிவிலிய வாசிப்பு

**சென்ற வாரத் தொடர்ச்சி:**

## இதயப்பூர்வமான விவிலிய வாசிப்பு

அறிவில் சிறக்க பல புத்தகங்களை படிக்கின்றோம். எடுத்துக்காட்டாக: செய்தி தாள்கள், பத்திரிக்கைகள், பாடபுத்தகங்கள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளைக் குறிப்பிடலாம். இவ்வகைப் புத்தகங்கள் அறிவு அளவில் நின்றுவிடுகின்றன. நமது இதயத்திற்குள் செல்வதில்லை. ஆனால், இறைவார்த்தையைப் படிக்கும்போது, நமது இதயங்கள் திறக்கப்படுகின்றன. இதயத் திற்குள் இறைவார்த்தைகளை நாம் வரவேற்கின்றோம் (யோவா 1:1, 12). அதனால், மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்ட வார்த்தையான இயேசுவோடு நாம் தனிப்பட்ட மற்றும் நெருங்கிய உறவில் நுழைகின்றோம்.

தனிப்பட்ட உறவு என்பது, அறிவை சார்ந்தது அல்ல. மாறாக, இரு மனிதர்களிடையே மலரும் நட்புறவாகும். நாம் இயேசுவோடும், இயேசு நம்மோடும் இணைகின்ற இறை மனித உறவே தனிப்பட்ட உறவாகும். இப்படிப்பட்ட இறை மனித உறவில், இயேசுவின் "அன்பை நாம் அனுபவிக்கின்றோம். அப்போது, விண்ணரசின் மறைபொருளை இயேசு நமக்கு வெளிப்படுத்துகின்றார் (மத் 13:11).

நெருங்கிய உறவு என்பது, இதயத்தை சார்ந்தது. இரு இதயங்களின் ஒன்றிப்பால் மலரும் உன்னத உறவாகும். இரு காதலருக்கிடையே நடைபெறும் உரை யாடல் போன்றது. அவ்வுரையாடலின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிவருகின்றன. இறைவார்த்தையும் இத்தகைய உறவை நம்மில் ஏற்படுத்தும் ஆற்றல் கொண் டுள்ளது. ஏனெனில், "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங் களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது" (எபி 4:12).

தனிப்பட்ட மற்றும் நெருக்கமான உறவு இதயத்தில் ஏற்படுகின்றது. எனவே, இயேசு வெளிப்படுத்துவதை அறிய நம் இதயங்கள் எப்போதும் திறந்திருக்க வேண்டும்.

ஏனெனில், "தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார்; மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்" என்று இயேசு கூறுகின்றார் (மத் 11:27). பிலிப்பிச்




செசாரியா பகுதிக்குச் செல்லும் வழியில், இயேசு தம் சீடரை நோக்கி, ஆனால், நீங்கள் யார் எனச் சொல்கிறீர்கள்?" என்று கேட்கின்றார் (மத் 16:15). சீமோன் பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று பதில் கூறுகின்றார். அதற்கு இயேசு, "யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில், எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்" என்றார் (மத் 16:16-17).

எனவே, இயேசுவோடு தனிப்பட்ட மற்றும் நெருக்கமான உறவு இருந்தால் மட்டுமே, அவர் வெளிப்படுத்துவதை அறிய நமது இதயங்களை திறக்கவும், அவரது கேள்விக்கு பேதுருவைப் போன்று பதில் அளிக்கவும் முடியும். ஏனெனில், கடவுளைப் பற்றிய உண்மைகள் மனித அறிவிற்கு மறைவாக உள்ளன. கடவுள் வெளிப் படுத்தினால் மட்டுமே அவற்றை நாம் அறிய முடியும். எம்மாவு பாதையிலே பயணித்த இரு சீடர்களுக்கு, உயிர்த்த இயேசு வழியில் தோன்றி மறைநூலை விளக்கி, உண்மைகளை வெளிப்படுத்துகின்றார். அவர்களது கண்கள் திறக்கப்படுகின்றன. அப்போது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, “வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?” என்று பேசிக்கொண்டார்கள்” (லூக் 24:32).

தொடரும்.....

# இயேசுவே நிம்மதி, அவரே இளைப்பாறுதல்

பொதுக்காலத்தின் பதினான்காம் ஞாயிற்றுக் கிழமையான இன்று நாம் படிக்கக் கேட்கும் வாசகங்கள் ‘இளைப்பாறுதல் தரும் இயேசு’ என்ற சிந்தனையை வழங்கு கின்றன. நாம் அதனைக் குறித்து சற்று விரிவாகச் சிந்தித்துப் பார்ப்பது நலம்.

இன்று மக்கள் எங்கு பார்த்தாலும் நிம்மதியைத் தேடி, ஆறுதலைத் தேடி, மனமகிழ்ச்சியைத் தேடி அலைவதைப் பார்க்கின்றோம். இவர்களுக்கெல்லாம் யாராவது நிம்மதியைத் தந்துவிட மாட்டார்களா? என்பதுதான் எண்ணமாக இருக்கின்றது. ஆனால் மனிதராகிய யாராலும் நிம்மதியைத் தந்துவிட முடியாது என்பதுதான் உண்மை.

இந்த பின்னணியில் நாம் இன்றைய நாளில் படிக்கக்கேட்ட நற்செய்தி வாசகத்தை கவனமுடன் தியானிப்போம். ஆண்டவர் இயேசு கூறுகின்றார். “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப் பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங் கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்” என்று. ஆம், இயேசு தரக்கூடிய இளைப்பாறுதல் இந்த உலகத்தில் எவருமே தரமுடியாத இளைப்பாறுதல். அவர் தரும் இளைப் பாறுதல் என்றுமுள்ள இளைப்பாறுதல். மனிதரால் நிம்மதிக்கான வழிகளை மட்டும்தான் சொல்லமுடியும். ஆனால் ஆண்டவர் இயேசுவோ நிம்மதியாக இருக்கின்றார். அதனால்தான் இயேசுவால், “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருபோரே எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்று சொல்ல முடிந்தது.

இன்றைய முதல் வாசகமானது இறைவாக் கினர் செக்கரியா நூலிலிருந்து, எடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் மெசியா வின் வருகையினால் நடக்கும் மகிழ்ச் சிகரமான நிகழ்வுகளைக் குறித்துப் படிக்கின்றோம். “மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ உன் அரசர் உன்னிடம் வருகின்றார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்” என்று. ஆகவே மெசியாவின் வருகையினால் நம்முடைய துன்பங்கள் துயரங்கள் அனைத்தும் மறைந்துபோய்விடும். அதற்கு நாம் கனிவுடையவர்களாகஇ மனதாழ்மையுள்ள வர்களாக கடவுளைத் தேடும் மக்களாக வாழவேண்டும் என்பதுதான் இறைவார்த்தை நமக்குத் தரும் செய்தியாகும். இருக் கின்றது.

மேலும், நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்” எனும் இயேசுவின் அமுத வாரத்தைகளில் . நாம் இயேசுவின் இயல்புகளைப் புரிந்து கொண்டு அவரைப் போன்று வாழ முற்படும்போது நம்முடைய வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் சோதனைகள் கவலைகள் கஷ்டங்கள் அனைத்தும் மாயமாய் பேகும் என்று உண்மை.

ஆகவேஇ நாம் நமது சுமைகளை இறைவனிடம் இறக்கி வைப்போம் உள்ளத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் கொண்டு வாழ்வோம். அதன்வழியாக இறைவன் அளிக்கும் இளைப்பாறுதலைப் பெறுவோம். இயேசு நம்மோடு இருக் கையில் நமது சுமை ஒருபோதும் பெருஞ் சுமையாகாது.

**பொதுக்காலம் 14-ஆம் ஞாயிறு**

சக் 9: 9-10
திபா 145: 1-2. 8-9. 10-11. 13
உரோ 8: 9.11-13
மத் 11: 25-30

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**

**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 2**